OS. 25/2023

நாள். 31.10.2025

பி.வா.சா.1 – மதிவானன்

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய நான் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் கண்டுள்ள விலாசத்தில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்த காலம் முதல். என் தந்தை ராஜகுரு திருச்சியில் நிரந்தரமாக குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். என் தந்தை 2005ம் ஆண்டில் இறந்தார். 2005ம் ஆண்டிற்கு முன்பு இருந்தே நானும், என் சகோதரிகளும் திருச்சியில்தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல, தேவிப்பட்டினம் விலாசத்தில்தான் குடியிருந்து வருகிறோம். என் அக்கா பெயர் கௌரிசுதா என்றால் சரிதான். என் தங்கை பெயர் சர்மிளாகலைச்செல்வி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டையில் நானும், என் சகோதரிகளும் திருச்சிராப்பள்ளியில் வசித்ததாக உள்ளது என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டை **வா.சா.ஆ.10**. வா.சா.ஆ.10 குடும்ப அட்டையில் என்னுடைய புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டை 2005-2009 க்கு வழங்கப்பட்டவை என்றால் சரிதான். என் தந்தை இறந்த பிறகு அவரது பெயரை நீக்கிவிட்டு நானும், என் சகோதரிகளும் குடும்ப அட்டையில் கண்ட விலாசத்தில் குடியிருந்தபோது வாங்கப்பட்ட குடும்ப அட்டை என்றால் சரியல்ல. குடும்ப அட்டையில் என் வயது 20 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கௌரிசுதாவின் வயது 22 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 குடும்ப அட்டையில் என் வயது 20 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கௌரிசுதாவின் வயது 22 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 குடும்ப அட்டையில் என் அப்பா பெயர் இல்லை என்றால் சரிதான். என் தங்கை சர்மிளாகலைச்செல்வியின் பெயர் பி.வா.சா.ஆ-7 குடும்ப அட்டையில் இல்லை

என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 குடும்ப அட்டையில் சுமித்ரா என்பவரின் பெயர் உள்ளது என்றால் சரிதான். அவள் என் அத்தை பார்வதியின் மகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 குடும்ப அட்டையில் சோபியாபினி என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான். அவள் என் அத்தை விஜயலெட்சுமியின் மகள் என்றால் சரிதான். என் அத்தைகள் பார்வதியும், விஜயலெட்சுமியும் 2, 3 வாதிகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 குடும்ப அட்டையில் 2008, 2009 ம் ஆண்டு இலவச வேட்டி சேலை வழங்கப்பட்டதாகவும், 2008 நவம்பரில் சிறப்பு நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் முத்திரைகள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–10 குடும்ப அட்டையை பயன்படுத்தி Indane Gas வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ல் உள்ள சுமித்ரா மற்றும் சோபியாபினி ஆகிய இருவரும் என் தாத்தா பாட்டியான நாகமுத்து, காளியம்மாள் ஆகியோர்கள் என்னைப்போலவே பேரப்பிள்ளைகள் என்றால் சரிதான். காளியம்மாளின் பிள்ளைகள் திருமணமாகி தனித்தனி குடித்தனமாக சென்ற பிறகு திருமணமாகாத பேரப்பிள்ளைகளின் பெயர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு குடும்ப அட்டை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. காளியம்மாள் இறந்த பிறகு அவர் பயன்படுத்திய குடும்ப அட்டையை தேடிக்கண்டுபிடித்து என் வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பாட்டி காளியம்மாள் இறந்த பிறகுதான் எனக்கு திருமணமானது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் என் மனைவி, குழந்தைகள் பெயர்களை சேர்த்து தனியாக ஒரு குடும்ப அட்டை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டையை நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருச்சியில்தான் நிரந்தரமாக குடியிருந்து வந்தேன் என்றும், என் பாட்டி இறந்த பிறகு தேவிப்பட்டினத்திற்கு குடிபெயர்ந்தேன் என்றால் சரியல்ல. காளியம்மாள் உயிருடன் இருக்கும்போது திருசசியில் இருந்து அவ்வப்போது வந்து பார்த்துவிட்டு செல்வேன் என்றால் சரியல்ல. என் அத்தை பார்வதி திருச்சியில்தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். என் தந்தை இறந்த

பிறகு நானும், என் சகோதரிகளும் திருச்சியில் வாழ்ந்த போது பெற்ற குடும்ப அட்டையை என் அத்தை வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. அந்த குடும்ப அட்டைதான் வா.சா.ஆ.10 என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 சொத்து வரி ரசீதில் வடக்குத்தெரு, தேவிப்பட்டினம், கதவு எண்.1/246 என உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கதவு எண். 38, கழனிக்குடி ரோடு, தேவிப்பட்டினம் என உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 குடும்ப அட்டையில் கதவு எண். 1/226, கழனிக்குடி, தேவிப்பட்டினம் என உள்ளது என்றால் சரிதான். சொத்து வரியில் குறிப்பிட்டுள்ள வடக்குத்தெரு மற்றும் கதவு எண் நான் தாக்கல் செய்துள்ள அபிடிவிட்டிலோ, குடும்ப அட்டையிலோ இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிசா.ஆ.8 சொத்து வரி ரசீதுக்கும் வழக்கு சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் திருச்சியில் தான் நிரந்தரமாக குடியிருந்து வந்தேன் என்றும், காளியம்மாளிடம் சேர்ந்து வாழ்ந்து வரவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.